**06.03.2026**

**SOP.No.142/2021**

**ம.சா.1 : சிவகாமி**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

6) நான் என்ன வழக்கு போட்டுள்ளேன் என்றால் என் அண்ணன் பழனிசாமியின் வாரிசுகள் என்று வாரிசுரிமை வழங்க கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். அவரை பழனியப்பன் என்றும் கூப்பிடுவார்கள். பழனியப்பன் பெயரில் சொத்து எதுவும் உள்ளதா என்றால் அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை செய்த பணம் தான் உள்ளது. அவர் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணி புரிந்தார். சேலம் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி புரிந்தார். பழனியப்பன் வாரிசு நான் தான் என்று பெத்தநாயக்கன்பாளையம் தாசில்தாரிடம் எதுவும் மனு கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. வளர்மதியை கேட்டால் தான் தெரியும். வாரிசு சான்றிதழ் வேண்டுமென்றால் தாசில்தாரிடம் மனு கொடுத்து அவர் கொடுக்க மறுத்தால் தான் நீதிமன்றத்திற்கு மனு செய்ய முடியும் என்றும் நான் மனுவே கொடுக்காமல் நான் நேரடியாக நீதிமன்றத்தில் நாங்கள் தான் வாரிசு என்று மனு தாக்கல் செய்தது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே பெத்தநாயக்கன்பாளையம் தாசில்தாரை தரப்பினராக சேர்த்து மனு தாக்கல் செய்தது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.06 16:39:29 +0530

**Subordinate Judge, Attur.**